Transport for NSW

# சாலைப் பாதுகாப்பு



## பள்ளிக்கு வாகனம் ஓட்டும்போதும் திரும்பும் போதும் உங்களுடைய குழந்தையைப் பாதுகாப்பாக வைத்திருத்தல்

பள்ளி நாளின் தொடக்கத்திலும் முடிவிலும் உங்களுடைய குழந்தையையும் மற்றவர்களையும் பாதுகாப்பாக வைத்திருக்க உதவும் சில குறிப்புகள் இங்கே:

- உங்கள் பிள்ளையின் வயது மற்றும் அளவுக்கு ஏற்ற குழந்தைக் கார் இருக்கையில் (child car seat) பொருத்தப்பட்டிருப்பதை உறுதிசெய்யவும். வாகனத்தில் இருக்கையையும் சரியாகப் பொருத்தப்பட்டிருக்க வேண்டும்.
- பள்ளி வலையங்களில் மணிக்கு 40km வேக வரம்பிற்கு கீழ் இருங்கள் மற்றும் அங்குள்ள குழந்தைகளைக் கவனியுங்கள்.
- பேருந்துகளில் ஒளிரும் விளக்குகளைப் பாருங்கள். சாலையைக் கடக்கக்கூடிய அல்லது கடக்கவிருக்கும் குழந்தைகளைப் பேருந்து ஏற்றிச் செல்கிறது அல்லது கீழே இறக்குகிறது என்பதை அவை உங்களுக்குத் தெரிவிக்கின்றன. குறைந்த வேக வரம்பு இருந்தால் அன்றி பேருந்து விளக்குகள் ஒளிரும் போது, நீங்கள் வேகத்தை மணிக்கு 40km க்குக் குறைக்க வேண்டும்.
- எப்பொழுதும் வண்டிப்பாதைகளில் (driveways) நுழையும் போதும் வெளியேறும் போதும் பாதசாரிகளுக்கு வழி கொடுங்கள்.
- வேகத்தைக் குறைத்து, பள்ளியைச் சுற்றியுள்ள எந்தப் பாதசாரிகள் கடவை அருகிலும் நிறுத்தத் தயாராகுங்கள். கண்காணிக்கப்படும் கடவையில், பள்ளியின் கடக்கும் மேற்பார்வையாளரின் வழிமுறைகளைப் பின்பற்றவும்.
- எப்பொழுதும் வாகனங்களைச் சட்டப்பூர்வமான தரிப்பிடத்தில் நிறுத்துங்கள் மற்றும் பள்ளிகளைச் சுற்றி உள்ள சட்டப்பூர்வமான திருப்பங்களைப் பயன்படுத்துங்கள். பள்ளிக்கு மாணவர்களை விட்டுச் செல்லும் மற்றும் அழைத்துச்செல்லும் பரபரப்பான நேரங்களில் U-திருப்பங்கள் (U-turns) மற்றும் மூன்று-புள்ளி திருப்பங்கள் (three-point turns) போன்ற திருப்பங்கள் ஆபத்தானவை.
- உங்கள் பிள்ளையை இறக்கிவிட்டு, சாலையின் பள்ளி இருக்கும் ஓரமாக அழைத்துச் செல்லுங்கள். சாலையின் குறுக்கே அவர்களை வருமாறு அழைப்பது ஆபத்தானது - போக்குவரத்தைச் சரிபார்க்காமல் அவர்கள் உங்களிடம் ஓடக்கூடும்.
- ‘பாதுகாப்பு கதவு’ வழியாக உங்கள் குழந்தை வாகனத்தில் இறங்கவும் ஏறவும் எப்போதும் உதவுங்கள். ‘பாதுகாப்பு கதவு’ என்பது சாலையின் கட்டுக்கு அருகில் உள்ள வாகனத்தின் பின்புற பக்க கதவு. இது முன்நகரும் போக்குவரத்திலிருந்து விலகி, உங்கள் குழந்தைக்கு பாதுகாப்பானதாக இருக்கும்.

சாலைச் சூழலில் குழந்தைகளைப் பாதுகாப்பாக வைத்திருப்பது பற்றிய கூடுதல் தகவலுக்கு **safetytown.com.au** இல் உள்ள குடும்பங்கள் (families) என்ற பகுதியைப் பார்வையிடவும்

தனித்துவக் குறியீடு 45095350 ஜூன் 2024 © NSW க்கான போக்குவரத்து

NSW GOVERNMENT

NSW சாலைகளில் பல உயிர்கள் பலியாகியுள்ளன.
**நமது இலக்கு பூச்சியம் ஆகும்.**

TOWARDS ZERO